**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar<br>Miscellaneous<br>Preliminary register<br>Sessions | CC.No. 415/2014 |
| Deposition Of Witness for | Prosecution PW 5<br>Defense<br>Court |
| Name | திரு. வீரபெருமாள் |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2022 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 04th day of November 2022.

நான் நெல்லையப்பபுரத்தில் வசித்து வருகிறேன். விவசாய வேலை பார்த்து வருகிறேன். அ.சா.1 யை தெரியும் எனது அக்கா கணவர். வழக்கின் எதிரிகளை தெரியும் அ.சா.1 ன் உறவினர்கள். தேதி மாதம் ஞாபகமில்லை 2010 ஆம் வருடம் ஒரு நாள் காலை 07.00 மணியளவில் அ.சா.1 வீட்டருகே வைத்து இடம் சம்ப்நதமாக உள்ள முன்விரோத்தில் அ.சா.1 ம், 1 வது எதிரிக்கும் இடையே சண்டை நடைபெற்றதாகவும், 1 வது எதிரி அ.சா.1 யை முள் கம்பால் அவருடைய இடது கையில் அடித்து ரத்த காயம் ஏற்படுத்தியதாகவும், அவருடைய வீட்டிற்கு அருகில் வசிக்கும் கிறிஸ்டியன் என்னிடம் தெரிவித்தார்.

போலிசார் என்னை வழக்கு சம்பந்தமாக மருத்துவமனையில் வைத்து விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

வழக்கு சம்பவம் பற்றி காலை சுமார் 07.45 மணிக்கு அ.சா.1 யை மருத்துமனை அழைத்து செல்வதற்காக எனக்கு தகவல் தெரிவித்தார்கள் அதனால் எனக்கு தெரியும். சம்பவ இடத்திற்கு 08.30 மணிக்கு வந்தேன். நேரடியாக மருத்துவமனைக்கு தான் அ.சா.1 யை அழைத்து சென்றேன். எத்தனை மணிக்கு அழைத்து சென்றேன் என்று ஞாபகமில்லை ஆனால் மருத்துவமனை அழைத்து செல்ல 1 1/4 மணி நேரம் ஆகும்.

சம்பவ இடத்திற்கு அருகில் முனைஞ்சிபட்டி மருத்துவமனை உள்ளது என்றால் சரிதான். அ.சா.1 க்கு கையில் அதிக வலி இருந்ததாக தெரிவித்ததால் முனைஞ்சிபட்டி மருத்துவமனை அழைத்து செல்லாமல் ஐகிரவுண்ட் மருத்துவமனைக்கு ஆட்டோவில் அழைத்து சென்றேன். சம்பவ இடத்திற்கு சென்ற போது முள்கள் முடுக்கில் இருந்தது. நான் பார்க்கும் போது முள்கள் சிதறி கிடந்ததா என்றால் 4 கம்புகள் அங்கும் இங்குமாக இருந்தது.

அ.சா.1 வீட்டின் முன்பு முள்ளை வைத்துஅடைத்து இருந்தார்களா என்றால் முள் கம்பால்

அடைத்திருந்தார்கள். மருத்துவனைக்கு போலிசார் வந்த நேரம் ஞாபகமில்லை ஆனால் விசாரணை செய்து எழுதி கொண்டார்கள் அதை என்னிடம் படித்து காண்பித்தார்கள் நான் கையெழுத்து செய்தேன். அதில் என்ன எழுதியிருந்தது என்று படித்து காண்பித்ததால் எனக்கு தெரியும்.

அ.சா.1 க்கு இடது கையில் அடிபட்டு சிறிது இரத்தம் இருந்தது, சிராய்ப்பு காயம் இருந்தது, உடலில் வேறு எங்கும் அடிபடவில்லை. அ.சா.1 அக்கா கணவர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal procedure)

**IN THE COURT OF** Judicial Magistrate, Nanguneri

Calendar
Miscellaneous
Preliminary register
Sessions
} CC.No. 415/2014

Deposition Of Witness for { Prosecution PW 4 / Defense / Court

Name திருமதி.ஏசுவடியாள்

Husband Name / Father's Name

Village

Taluk

Religion Muslim/Christian/Hindu

Age /2022

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 04th day of November 2022.

நான் கோடான்குளத்தில் வசித்து வருகிறேன். கூலி வேலை பார்த்து வருகிறேன். அ.சா.1 யை தெரியும் எனது கணவர். வழக்கின் எதிரிகளை தெரியும். என்னுடைய பக்கத்து வீட்டுகாரர்கள். தேதி மாதம் வருடம் ஞாபகமில்லை சுமார் 12 வருடத்திற்கு முன்பாக ஒருநாள் காலை 07.00 மணியளவில் என் வீட்டிற்கு கீழ்புறம் செல்லையா முள்ளை வெட்டி போட்டார். தோட்டத்தில் இருந்து வந்த எனது கணவர் எதிரியிடம் எதுக்கு இவ்வாறு முள்ளை வெட்டி போடுகிறாய் என்று கேட்டார். அதற்கு செல்லையா அப்படி தான் போடுவேன் என்று தேவடியாமவனே என்று திட்டி வெட்டி போட்ட முள்ளால் எனது கணவரை கையில் அடித்தார். அதனால் அவருக்கு ரத்த காயம் ஏற்பட்டது.

எதிரி ஜெயகுமாரி என் கணவரின் தலையில் மண்ணை அள்ளி போட்டு உன்னால் தான் இவ்வளவு பிரச்சனை என்று சொன்னார். எதிரிகள் இருவரும் சேர்ந்து இன்று தப்பித்துவிட்டாய் இன்னொரு நாள் கொன்றுவிடுவோம் என மிரட்டினார்கள். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள். போலிசார் விசாரணையின் போது சம்பவத்தின் போது நான் ஊரில் இருந்தேன் எனவும் சம்பவத்தை கேள்விபட்டேன் என்று கூறினேன்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எதிரிகளுக்கும் எங்களுக்கும் பிரச்சனை இருந்தது என்றால் சரிதான். வழக்கு சம்பவத்தின் போது சம்பவ இடத்தில் எதிரிகள் மட்டும் எனது கணவரும் இருந்தார்கள் கிறிஸ்டியான் மற்றும் செல்லான் ஆகியோர் சண்டையை விலக்கிவிட்டார்கள். என் கணவரை அடித்த விபரம் காலை சுமார் 08.00 மணியளவில் தான் தெரியும். சம்பவநடந்த இடம் எனக்கு சொந்தமான இடமாகும். முள்ளை எதிரி செல்லையா தான் வெட்டிபோட்டார்.

காவல்நிலையத்திற்கு நான் செல்லவில்லை மருத்துவமனைக்கு காலை 08.30, 08.45 மணியளவில் சென்றேன். என் கணவர் 108 ஆம்புலன்ஸில் மருத்துவமனைக்கு சென்றார்.

எனது தம்பி வீரபெருமாள் சம்பவஇடத்திற்கு எப்போது வந்தார் என்றால் காலை சுமார் 0730 மணியளவில் வந்திருப்பார். எனது கணவர் கையில் அடிப்பட்டது எந்த கை என்று படிப்பறிவு இல்லாததால் எனக்கு சொல்ல தெரியவில்லை.

மருத்துவமனைக்கு போலிசார் இரவு வந்தார்கள். என்னை போலிசார் மருத்துவமனையில் விசாரணை செய்தார்கள். மருத்துவமனையில் வைத்து கையெழுத்து செய்தேனா என்று ஞாபகமில்லை மறந்துவிட்டது. மருத்துவமனைக்கு போலிசார் வரும் போது நான் மருத்துவமனையில் இல்லை. வழக்கு சம்பவத்திற்கும் எதிரிக்கும் சம்பந்தமில்லை என்றும், மேற்படி முடுக்கில் எனது கணவர் தான் முள்ளை எடுத்து போட்டார் வழக்கிற்காக எதிரி போட்டதாக சொல்கிறீர்கள் என்றால் சரியல்ல.

மேற்படி முள்ளை எடுக்கும் போது முள்ளால் ஏற்பட்ட காயத்தை வைத்து எதிரிக்கு எதிராக பொய்யாக சாட்சியம் அளிக்கீறிற்கள் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை இல்லை</u>**